முருகப்பெருமான் துணை

**மகான் இராமானந்தர் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

10.05.2023, புதன்கிழமை

1. ஞானச்சுடராக அருளுகின்ற
   ஞானியே ஆறுமுக அரங்கனே
   வானவர்கள் உம்மோடு இணைந்து
   வழிநடத்த அற்புதம் புரிகின்ற
2. புரிகின்ற ஞான வள்ளலே
   பூவுலகில் உன் பெருமை கூறி
   தெரிவிப்பேன் அறிவுரை ஆசி
   தேசிகனுக்கு சோபகிருது தகர்திங்கள்
3. திங்களிலே இருபானேழ்திகதி புந்திவாரம்
   (சோபகிருது வருடம் சித்திரை மாதம் 27ம் நாள், 10.05.2023, புதன்கிழமை)
   தெரிவிப்பேன் இராமானந்தர் யானும்
   பங்கமிலா ஞான வாழ்வுதனை
   பாமரரும் அடைய வேண்டி
4. வேண்டியே அருளிவருகின்ற
   வேலவன் அம்சமான அரங்கன்
   தொண்டு கலந்த சேவையே
   தேசமதில் தூய்மையானதப்பா
5. அப்பனே மக்களெல்லாம்
   அரங்கமகான் ஞானமதை
   ஒப்புக் கொண்டு வருதலுற
   ஓதிடுவேன் ஞானிகள் சக்தி
6. சக்தி பாதுகாப்பாக மாறி
   செகமெல்லாம் நன்மை தரும்
   சக்திமிக்க அரங்கன் அன்னதானமதை
   சகலரும் கிளைகள் படைத்து
7. படைத்து எங்கும் செய்துவர
   பக்குவமான தருமலோகமாக
   தடையற உலகம் தேறியே
   தருமவான்கள் எண்ணிக்கை பெருகி

8. பெருகியே எங்கும் மக்களிடை
பேதம் கருதா சமத்துவ
முருகப் பெருமான் வழிபாடாக
முழுமைதரும் வழிகாட்டலாக

9. ஆகவே அரங்கன் ஆசிபட
அனைத்தும் மாற்றமாகி
வகைபட ஞான வாழ்வுடன்
வையகத்தில் ஞானிகள் வெளிப்பட

10. வெளிப்பட ஞான ஆட்சி
விரைந்து ஞானிகள் மூலம்
கலப்படம் லஞ்ச அபகரிப்பு
கட்டாயம் மக்களுக்குத் துரோகமில்லா

11. துரோகமில்லா தூய ஆட்சியாக
தெய்வபலமிக்க ஆட்சியாக
வருங்காலம் அடைதல் காண்கும்
வழங்கிய அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–